
பி.எஸ்.வி
பிக்சர்



# பிள்ளைக் கனியமுது

# பிள்ளைக் கனியமுது

நடிகர்கள்:

S. S. ராஜேந்திரன் P. S. வீரப்பா
காகா ராதாகிருஷ்ணன் K. சாய்ராம்
M. E. மாதவன் மாஸ்டர் கோபால்

மற்றும் பலர்

கௌரவ நடிகர்கள்:

S. V. ரங்கராவ், K. பாலாஜி

நடிகைகள்:

E. V. சரோஜா M. N. ராஜம்
சந்தியா T. P. முத்துலட்சுமி,
K. S. அங்கமுத்து

மற்றும் பலர்

தயாரிப்பு: P. S. வீரப்பா

ஸ்டுடியோ:

பாரமவுண்டு

# நிர்மாணித்தவர்கள்

| | | |
|---|---|---|
| கதை | ... | K. P. கொட்டாரக்கரா |
| வசனம் | ... | ச. அய்யாப்பிள்ளை |
| இசையமைப்பு | ... | K. V. மகாதேவன் |
| பாடல்கள் | ... | அ. மருதகாசி |
| | | பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் |
| ஒளிப்பதிவு | ... | C. V. மூர்த்தி |
| ஒலிப்பதிவு (பாடல்கள்) | ... | E. I. ஜீவா |
| ஒலிப்பதிவு (வசனம்) | ... | K. துரைசாமி T.R. சாரங்கன் |
| எடிட்டிங் | ... | M. A. திருமுகம் |
| | ... | M. ஜெகனுதன் |
| ஆர்ட் டைரக்டர் | ... | P. P. சௌதரி |
| உடைகள் | ... | P. ராமகிருஷ்ணன் |
| ஸ்டண்ட் | ... | R. N. நம்பியார் |
| ஸ்டில்ஸ் | ... | K. G. வேலப்பன் |
| மேக்கப் | ... | C. V. சங்கர் |
| | | ரங்கசாமி, T. T. சுந்தரம் |
| லாபரட்டரி | ... | மதராஸ் சினி லாபரட்டரி |
| புரொடக்ஷன் நிர்வாகம் | ... | R. கிருஷ்ணமூர்த்தி |
| மேற்பார்வை | ... | N. நாகசுப்பிரமணியம் B. A. |
| விளம்பர நிர்வாகம் | ... | M. K. ராமன் |
| விளம்பரம் | ... | பாலன் |
| உதவி டைரக்ஷன் | ... | P. S. மாரிமுத்து |

## டைரக்ஷன்: **M. A. திருமுகம்**

# "பிள்ளைக் கனியமுது"

## கதைச் சுருக்கம்

சச்சிதானந்தம் பணக்காரர். வெளியில் பொதுநல வேஷம் போட்டு, உள்ளூர சுயநல வேட்டையாடி வருபவர். தன் வீட்டு வேலைக்காரன் முனியன் என்பவனின் மகள் முத்தம்மாள்மீது மோகம் கொண்டு, அவளை அடையப் பலவழிகளில் முயற்சி செய்து வருகிறார். ஆனால், அவர் வீட்டிலேயே தோட்ட வேலை செய்துவரும் முருகன் என்பவன் முத்தம்மாளைக் காதலிக்கிறான். அவளும் முருகனைக் காதலிக்கிறாள் முருகனும் முத்தம்மாளும் தனிமையில் சந்தித்து தங்கள வருங்காலத்தைப்பற்றிக் கற்பனை செய்து மகிழ்கின்றனர். மணம் முடித்துப் பிள்ளை பெற்றால், குழந்தைக்குப் "பாபு" என்று பெயர் வைக்கவேண்டுமென்று கற்பனை செய்கின்றனர்.

ஒருநாள் மோகனா என்ற நாட்டியக்காரியின் நடன நிகழ்ச்சிக்கு சச்சிதானந்தம் தலைமை வகிக்கிறார். நாட்டியம் முடிந்ததும் அவளைத் தன் விருந்தினர் விடுதியில் தங்குமாறு அழைக்கிறார். அவளும் சம்மதிக்கிறாள். முருகன் அவளுக்கு ஏவின வேலை செய்வதற்கு அமர்த்தப்படுகிறான்.

மோகனா கைக்கெட்டாப் பழமாக இருப்பது கண்ட சச்சிதானந்தம் முத்தம்மாளை அடையக் குறுக்கு வழியைக் கையாளுகிறார். அதன்படி தன் வேலை ஆளை அனுப்பி முனியன் மயக்கமுற்று விழுந்துவிட்டதாக முத்தம்மாளை அழைத்து வருகிறார். தகப்பனைத் தேடி வீட்டுக்கு வந்த முத்தம்மாளை சச்சிதானந்தம் பலாத்காரம் செய்கிறார். ஆனால், சச்சிதானந்தத்தின் மனைவி குணவதி உதவியால் முத்தம்மாள் கற்பைக் காப்பாற்றிக் கொள்கிறாள். தப்புகிறாள். இதை தற்செயலாக முருகன் கண்டு, முத்தம்மாள்மீது சந்தேகப்படுகிறான்!

ஒருநாள் முருகன் மோகனாவை சிறுத்தையொன்றிடமிருந்து காப்பாற்றி, அவள் மயக்கமுற்றபோது அவளைத் தாங்கிப் பிடிக்கிறான். இதை முத்தம்மாள் காண நேரிடுகிறது. முருகன் மீது அவள் சந்தேகப் படுகிறாள்.

மோகனா, முருகன் சோர்வுற்றிருப்பதறிந்து அவனைப் பாடலாலும், ஆடலாலும் தன் வசப்படுத்துகிறாள். முருகனும் அவளிடம் மனதைப் பறி கொடுக்கிறான். இதை சச்சிதானந்தம் நேரில் கண்டு சீறுகிறார். மோகனாவும் முருகனும் சச்சிதானந்தத்தை எதிர்த்து, அங்கிருந்து கிளம்புகின்றனர். மோகனா முருகனைத் தன் ஊருக்கு அழைத்துப்போய் மணம் முடித்துக் கொள்கிறாள்.

தன் கையாட்களை அனுப்பி ஒரு நாளிரவு முத்தம்மாளைத் தூக்கி வருமாறு ஏற்பாடு செய்கிறார் சச்சிதானந்தம். ஆனால், எதிர்பாராத விதமாக அவரே அங்கு சென்று — முனியனைக் கொலை செய்ய நேரிடுகிறது. பின்பு தனக்கு விரோதியான மானேஜர் மருதாசலத்தின் மீது அந்தக் கொலைக் குற்றத்தை சுமத்தித் தண்டனைக்குள்ளாக்கியும் விடுகிறார். அனாதையான முத்தம்மாள் மானேஜரின் தாயாருடன் வசித்து வருகிறாள்.

மோகனா முருகன் உறவு பாபு என்ற ஒரு பையன் பிறந்த பின்பு கொஞ்சம் கொஞ்சமாக அற்றுக்கொண்டே வருகிறது. ஒருநாள் மோகனாவை நாட்டிய நிகழ்ச்சிகளுக்குப் போகக் கூடாது என்று முருகன் கட்டுப்பாடு செய்யவே மோகனா முருகனை, "நீ என் வேலைக்காரனாக இருந்தாய் ஒரு காலத்தில்—" என்று இழிவாகப் பேசுகிறாள். முருகன் ஆத்திர மடைந்து அவளைக் கொலலப்போகிறான். மோகனா ரிவால்வரை எடுத்து முருகனைக் கொல்ல எத்தனிக்கிறாள். ஆனால், விதி வசத்தால் அவள் தன்னைத்தானே சுட்டுக்கொள்ள நேரிடு கிறது. முருகன் "பாபு"வை அழைத்துக்கொண்டு முத்தம்மாளைக் காணப் புறப்படுகிறான்.

வரும் வழியில் ஓர் கார் விபத்தில் முருகன் கண்களை இழக் கிறான். பாபுவின் துணையால் முத்தம்மாளைத் தேடும் நிலை ஏற்படுகிறது.

இதற்கிடையே ஓர் நாள் முருகனைத் தனியே விட்டுவிட்டு பாபு மட்டும் பிச்சை எடுக்க வருகிறான். முத்தம்மாளைச் சந்திக் கிறான். இருவரும் இனந்தெரிந்துகொள்ளுகின்றனர். பாபு தன் தகப்பனிருக்குமிடத்தைக் காட்டுவதாக அழைத்து வருகிறான்.

முத்தம்மாள் முருகனை மறுபடி காண முடிந்ததா...?

பாபுவுக்குத் தந்தை அன்பு மீண்டும் கிடைத்ததா...?

முத்தம்மாளை அடையாமல் முடியாது என்றிருந்த சச்சிதா னந்தம் முயற்சி பலித்ததா...?

முருகன் என்ன ஆனான்...?

மருதாசலத்தின் கதி என்ன...?

சச்சிதானந்தத்தின் பாபச் செயல்களுக்குத் தண்டனை கிடைத்ததா...?

பதிலைப் படம் பார்த்துத் தெரிந்துகொள்ளவும்.

## 1

இயற்றியது: அ. மருதகாசி

பாடியவர்: T. M. சௌந்தரராஜன்

ஏர்முனைக்கு நேர் இங்கே எதுவுமே இல்லே!...ஏ...ஏ...
என்றும் நம்ம வாழ்விலே பஞ்சமே இல்லே! ...ஆ...ஆ...

ஏர்முனைக்கு நேர் இங்கே எதுவுமே இல்லே!
என்றும் நம்ம வாழ்விலே பஞ்சமே இல்லே!...

பூமியிலே மாரியெல்லாம் சூரியனாலே—பயிர்
பூப்பதுவும் காய்ப்பதுவும் மாரியினாலே!—நாம்
க்ஷேமமுற நாள் முழுதும் உழைப்பதனாலே —இந்த
தேசமெல்லாம் செழித்திடுது நம்ம கையாலே! ...(ஏர்)

நெத்தி வேர்வை சிந்தினோமே முத்து முத்தாக—அது
நெல் மணியாய் விளைஞ்சிருக்கு கொத்துக் கொத்தாக
பக்குவமாய் அறுத்து அதைக் கட்டுக் கட்டாக—அடிச்சு
பதறு நீக்கி குவிச்சு வைப்போம் முட்டு முட்டாக .. (ஏர்)

வளர்ந்துவிட்ட பருவப் பெண்போல் உனக்கு வெட்கமா? - தலை
வளைஞ்சு சும்மா பாக்கிறியே தரையின் பக்கமா... - இது
வளர்ந்துவிட்ட தாய்க்குத் தரும் ஆசை முத்தமா?... - என்
மனைக்கு வரக் காத்திருக்கும் நீ என் சொத்தம்மா! ...(ஏர்)

## 2

இயற்றியது: அ. மருதகாசி

பாடியவர்கள்: ஜமுனாராணி - ராஜேஸ்வரி
கஸ்தூரி—உடுதா சரோஜினி

பெண்கள்: ஆம்பளை மனசு பலதினுசு!
அதிலே இவரு ஒரு தினுசு!
அதையும் இதையும் நெனைக்கும்
நெனச்சா உடனே முடிக்கும்
புதுமையான மனுஷர் இவர்போல்
...உலகில் ஏதடி (ஆம்பளை)

பெண்: அற்புதக் கலைகள் அறுபத்தி நாலும்
அழகாய் ரசிப்பாரு!...

பெண்: அல்லும் பகலும் ஆனந்தம் காண
அவைகளை வளர்ப்பாரு!...

பெண்கள்: புதுமையான மனுஷர் இவர்போல்
—உலகில் ஏதடி?... (ஆம்பளை)

பெண்: அழகினில் மாறன் பணத்தில் குபேரன்
கொடையினில் கர்ணன் இவர் தாண்டி!...

பெண்: விழிகளினாலே பெண்களை மயக்கும்
வீர விஜயனும் இவர் தாண்டி!...

பெண்கள்: புதுமையான மனுஷர் இவர்போல்
—உலகில் ஏதடி?... (ஆம்பளை)

பெண்: உண்மையில் ஐயா தயவிருந்தாலே
ஒரு குறை நேராது ..

பெண்: உயிருக்கு உயிராய் நடந்திடவேணும்
நாமும் தவறாது!...

பெண்கள்: புதுமையான மனுஷர் இவர்போல்
—உலகில் ஏதடி?... (ஆம்பளை)

## 3

இயற்றியது: பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

பாடியவர்கள்: கோஷ்டி கானம்

(முதல் கட்டம்)

பெண்கள்: காக்காய்க்கும் காக்காய்க்கும் கல்யாணமாம்
கானக் கருங்குயிலு கச்சேரியாம்!

ஆண்கள்: கண்டகண்ட பக்கமெல்லாம் அழைப்புகளாம்
காலம் தெரிஞ்சுக்கிட குறிப்புகளாம் - ஹாய்

எல்லோரும்: காக்காய்க்கும் காக்காய்க்கும் கல்யாணமாம்
கானக் கருங்குயிலு கச்சேரியாம்!...

பெண்கள்: வீட்டுக்கு வீடு விருந்துகளாம்
வில்லு வண்டிக் கூண்டு மேலே ஊர்வலமாம்!
—ஊர்வலமாம்

ஆண்கள்: பழங்களும் விதைகளும் பரிசுகளாம் - அதன்
பரம்பரை மொழியிலே வாழ்த்துகளாம்!...

எல்லோரும்: காக்காய்க்கும் காக்காய்க்கும் கல்யாணமாம்
கானக் கருங்குயிலு கச்சேரியாம்!

பெண்கள்: ஒற்றுமையில்லாத மனிதரைப்போல்-அது
ஒண்ணை ஒண்ணு கொத்திக்கிட்டு ஓடலையாம்!

ஆண்கள்: உயர்வு தாழ்வு என்று பேதம் பேசிக்கிட்டு
ஒதுங்கி வாழ இடம் தேடலையாம்
ஒதுங்கி வாழ இடம் தேடலையாம்!...

எல்லோரும்: காக்காய்க்கும் காக்காய்க்கும் கல்யாணமாம்
கானக் கருங்குயிலு கச்சேரியாம்!

பெண்கள்: அதிகமாச் சேத்துக்கிட்டு அல்லும் பகல்
[காத்துக்கிட்டு
இருப்பவங்க போல நடக்கலையாம்!

ஆண்கள்: நல்ல இதயத்தை மாத்திக்கிட்டு ஈயாதவன்போல
கதவைத்தான் சாத்திக்கிட்டு சாப்பிடலையாம்!

பெண்கள்: வரிசை தவறுமே குந்திக்கிட்டுதாம்
வந்ததுக்கெல்லாம் இடம் தந்துக்கிட்டுதாம்!

ஆண்கள்: மனிதனைக் கேலி பண்ணிக்கிட்டுதாம்—அவன்
வாழ்க்கையின் கோணலை எண்ணிக்கிட்டுதாம்!

எல்லோரும்: காக்காய்க்கும் காக்காய்க்கும் கல்யாணமாம்
கானக் கருங்குயிலு கச்சேரியாம்!

(2-வது கட்டம்)

பாடியவர்கள்
சீர்காழி கோவிந்தராஜன்
& P. சுசீலா

முத்த: சீவி முடிச்சிக்கிட்டு சிங்காரம் பண்ணிக்கிட்டுத்
தேரோட்டம் பாக்கப் போறேன் வாறியா?—மச்சான்
தேரோட்டம் பாக்கப்போறேன் வாறியா!...

முருக: ஆடுதுரை தங்கமணி அல்லிவேஷம் போடுறாளாம்
நாடகம் பாக்கப் போறேன் வாறியா? பொண்ணே
நாளைக்குத் திரும்பிடலாம் ஜாலியா!...

முத்த: கோபுரமாம் கும்பங்களாம் - கொடிகட்டிப் —
பறக்கிற கம்பங்களாம்!

முருக: ஊஹூம்......

முத்த: கூட்டங்களாம் நாட்டங்களாம்—மேளம்
கொட்டிக்கிட்டு ஆடுகிற ஆட்டங்களாம்—மச்சான்
சித்திரைத் திருநாளு மருதையிலே—நம்ம
சுத்திச் சுத்திப் பாத்திடலாம் குருதையிலே

முருக: ஓஹோ! — பத்துக்குரல் முத்துக்கண்ணு பாடுறாளாம்
பவளக்கொடி வேஷத்திலே ஆடுறாளாம்!
சீனுகளாம் ஜிமிக்கிகளாம்—நீ
சிரிக்கிற மாதிரியா வெளிச்சங்களாம்! பொண்ணே!
ஓசிலே நாடகம் திருச்சியிலே — நம்ப
ஒண்ணாக் கிளம்பிடலாம் வாமயிலே!
வா மயிலே!...வா மயிலே!—

4

இயற்றியது
அ. மருதகாசி

பாடியவர்கள்
சீர்காழி கோவிந்தராஜன்
P. சுசீலா

முத்த: பிள்ளைக்கனி அமுது ஒண்ணு
பிறந்திட வேணும்!—அதை
அள்ளிக் கையால் அணைத்து
இன்பம் அடைந்திட வேணும்!

முருக: செல்லக்கிளி மழலை மொழி
சிந்திடவேணும்!—நாம்
செவியாற அதைக் கேட்டு
மகிழ்ந்திட வேணும்!...

முத்த: கள்ளமில்லா அன்பை
கன்னித் தமிழ் பண்பை

முருக: கலந்துணவாய் நாமதற்கு
ஊட்டிட வேணும்!—

இருவ: பிள்ளைக்கனி அமுது ஒண்ணு
பிறந்திட வேணும்!—அதை
அள்ளிக் கையால் அணைத்து
இன்பம் அடைந்திட வேணும்

முருக: தெள்ளு தமிழ்க் கலைகளிலே
தேர்ந்திட வேணும்!—பொது

சேவையிலே முன்னணியில்
திகழ்ந்திட வேணும்!

முத்த: உள்ளம் ஒன்று கூடும்
உறவின் பலன் நாடும்

முருக: நம் கனவும் நனவாகி
நலம் தர வேணும்!

இருவ: பிள்ளைக் கனி அமுது ஒண்ணு
பிறந்திட வேணும்! அதை
அள்ளிக் கையால் அணைத்து
இன்பம் அடைந்திட வேணும்!

5

இயற்றியது — பாடியவர்
அ. மருதகாசி — ஜிக்கி.

ஓ!......ஓ!......ஓ......
நவநீத சோரனும் என்று? வருவானென்று
ராதாவும் ஏங்குகிருள் நின்று!
செவியில் வேங்குழலின் ஓசைதரும்
தீஞ்சுவை நாதத்தால் இன்பமுறும்!
இதயம் அலேமோதவே திண்டாடி
வழிமீது விழியாகவே!......ஓ...... (நவநீத)

[கெஜல்]

அரும்பாக இருந்த நெஞ்சை
குறும்பாலே மலரவைத்து
கரும்பாகப் பேசிய நீ .....
திரும்பாத விந்தை என்ன?......ஆ .....ஆ!......

[பாட்டு]

தென்றல் வடிவினிலே தீண்டுகின்ருன்
நெஞ்சில் புது உணர்வைத் தூண்டுகின்ருன்
கண்கள் காணுமலே கோபாலன்
கனிவாகப் பேசாமலே!......ஓ!...... (நவநீத)

6

இயற்றியது — பாடியவர்கள்
அ. மருதகாசி — சீர்காழி கோவிந்தராஜன்
P. சுசீலா

முத்த: ஓடுகிற தண்ணியிலே ஒறச்சு விட்டேன்
[சந்தனத்தை

சேந்துதோ?...சேரலேயோ?...செவந்த மச்சான்
[நெத்தியிலே......

முருகன் : சந்தனப் பொட்டு வச்சு
சொந்த மச்சான் வந்திருக்கேன்!
சந்தோஷமாக நீயும் வந்து சேரு இக்கரைக்கு!

முத்த: இக்கரையில் நானிருக்க
அக்கரையில் நீயிருக்க
இருவரையும் பிரிக்க இடையில் இந்த ஆறிருக்க...

முருகன்: ஆருலும் நம்மைப் பிரிக்க
ஆகுமோடி மத்தியிலே...
ஆசையுள்ள பெண்மயிலே—
பாரு வாரேன் பக்கத்திலே

முத்த: பக்கத்திலே வந்தவுடன்
பாசமுள்ள எம்மனசு
சொக்காமல் சொக்கிடுது சுத்தி சுத்தி ஆடிடுது!

முருகன்: அக்கம் பக்கம் யாருமில்லே
ஆட்டம் போடு பம்பரமா
பக்கப் பாட்டு நானதுக்கு பாடிடுவேன் முத்தம்மா

முத்த: பக்குவமா நேரம் பாத்துப்
பாட்டுப் பாட வந்த மச்சான்!...என் சொந்த மச்சான்
வெக்கமா இருக்குதுங்க விலகிக் —
கொஞ்சம் போங்க மச்சான்!

முருகன்: வெக்கத்தையும் மூட்டைகட்டி
கக்கத்திலே வச்சிக்கிட்டு
வில்லாக வளேஞ்சு ஆடு டப்பாதாளம் போட்டுக்கிட்டு
வில்லாக வளேஞ்சு ஆடு டப்பாதாளம் போட்டுக்கிட்டு

7

இயற்றியது — பாடியவர்

அ. மருதகாசி — ஜிக்கி

அழகிருக்கு அறிவிருக்கு ஆனு அது இல்லே!...எது?
அடுத்தவரை மதிமயக்கும் நாகரீகமில்லே!...
பலவிதமான ஆடை அதில்
பரிமள அத்தர் வாடை—வெளிப்



பகட்டால் கவரும் ஜாடை—இந்த
விஷயத்திலே நீங்க சோடை !
என் சொல்லைக் கேளுங்க !...
இப்போது வாருங்க !
பின்னாலே உண்மையை நீங்க
புரிஞ்சுக்குவீங்க !... (அழகிருக்கு)
உலகம் ஓடுது முன்னே—உங்க
உள்ளம் ஓடுது பின்னே—அதில்
செலுத்துங்க ராஜா கண்ணை—அப்போ
தெரிஞ்சுக்கலாம் நீங்க என்னை...
ஒன்றாகச் சேர்ந்து நாம் !
உல்லாசமாகவே...
விஞ்ஞானச் சந்திரன் மேலே
சுற்றிடலாங்க !...... (அழகிருக்கு)

8

இயற்றியவர்: அ. மருதகாசி

பாடியவர்: ஜமுனாராணி—ராஜேஸ்வரி
கஸ்தூரி—உடுதா சரோஜினி

மோகனா: சங்கத் தமிழ் மொழி
கொஞ்சும் வர்ணக் கிளி
எங்கள் இருவிழி நீ—கண்ணே
இன்பம் தரும் ஒளி நீ !......
எங்கள் இருவிழி நீ !......

பெண்கள்: சங்கத் தமிழ் மொழி
கொஞ்சும் வர்ணக் கிளி
எங்கள் இருவிழி நீ - கண்ணே
இன்பம் தரும் ஒளி நீ......
எங்கள் இருவிழி நீ !......

மோகனா: தங்க நிற மலரே ! - தொட்டிலில்
தவழும் சந்திரனே !
பிஞ்சுத் தளிர்க் கரத்தால் - ஜாடை
பேசிடும் சுந்தரனே !... .. (சங்)

முத்தே !...மரகதமே ! திகட்டாத
முக்கனியின் சுவையே !...
புத்தமுதே ! தேனே ! எழுதா
சித்திரமே வாடா !...

10

பெண்கள்: சங்கத் தமிழ் மொழி
கொஞ்சும் வர்ணக் கிளி
எங்கள் இருவிழி நீ - கண்ணே
இன்பம் தரும் ஒளி நீ !...எங்கள் இருவிழி நீ !...

9

இயற்றியது: அ. மருதகாசி

பாடியவர்: T. M. சௌந்தரராஜன்

வழி மாறிப் போகுமா?...
பழி பாவம் துரோகமே!...
வதை செய்யும் உன்னையே !...
இது என்றும் உண்மையே !

பிழையறியா ஒரு பேதையும் உன்னால்
அழுது கண்ணீரைச் சிந்துகிருள்
அதன் பலனைப் பாரடா !...
சுகம் உனக்கு ஏதடா !... (வழி)

மதியிழந்தே ஒரு காகிதப் பூவை
மதித்து ரோஜாவை மிதித்துவிட்டாய் !
அதன் பலனைப் பாரடா !
சுகம் உனக்கு ஏதடா ?.. ... (வழி)

---

## விரைவில் எதிர்பாருங்கள்!

(திருச்சி, தஞ்சை, ஜில்லாக்களுக்கு)

**ராஜ நர்த்தகி**
சிவாஜி கணேசன் — வைஜயந்திமாலா

○

M. A. V. & வள்ளியப்பா புரொடக்ஷன்ஸ்
**மாதவி**
எஸ். எஸ். ராஜேந்திரன்—தேவிகா

○

கைவசமுள்ள படங்கள்:

பானைபிடித்தவள் பாக்கியசாலி
கல்யாணம் பண்ணிப்பார்
பாதாள பைரவி
அனார்கலி
தாய்க்குப் பின் தாரம்
நல்ல இடத்து சம்பந்தம்
நீலமலைத் திருடன்

: விபரங்கட்கு :

உமையாள் பிக்சர்ஸ் பிரைவேட் லிமிடெட்,
phone: NEAREST 716. Tel: "UMAPIC" P. Box 360.
திருச்சிராப்பள்ளி – 2.


செந்தமிழ்ப் பதிப்பகம், புதுக்கோட்டை.